# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.29
## 2025, ஏப்ரல் 22 , செவ்வாய்க்கிழமை
## சித்திரை 9, திருவள்ளுவர் ஆண்டு – 2056

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

**"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை யுடைய செயல்."**

(அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.)

1. இரங்கல் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கீழ்க்காணும் இரங்கல் தீர்மானத்தை பேரவைமுன் வைத்தார்கள்:–

போப் பிரான்சிஸ், கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராகவும், பரிவோடும், முற்போக்குக் கொள்கைகளோடும், பெரும் மாற்றங்களை முன்னெடுத்த ஆளுமையான திருத்தந்தை போப் பிரான்சிஸ் அவர்கள் தமது 88–வது அகவையில் 21.4.2025 அன்று வாடிகன் நகரில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

போப் பிரான்சிஸ் அவர்கள் இரக்கமிகுந்தவராக, முற்போக்குக் குரலாக, பணிவு, அறநெறிசார் துணிவு மற்றும் ஆழமான மனிதநேயத்துடன் திருப்பீடத்தை வழிநடத்தினார். வறியவர் மீதான அர்ப்பணிப்பு, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கான அரவணைப்பு, நீதி, அமைதி மற்றும் மதங்களுக்கு இடையிலான உரையாடலுக்கான அவரது முன்னெடுப்புகள் ஆகியவை கத்தோலிக்க உலகத்தைத் தாண்டியும் அவருக்கு பெரும் மரியாதையை பெற்றுத்தந்தன.

அன்னாரது மறைவினால் அவரை இழந்து துயருற்றிருக்கும் வாடிகன் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், உலகெங்கும் வாழும் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்காணும் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.

2. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 219 முதல் 228 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் மற்றும் குறுகிய கால வினா எண்.1 ஆகியவை பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

..2

3. <u>பேரவை விதி 110-இன் கீழ் அறிக்கை</u>

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-இன் கீழ் அறிக்கையினைப் பேரவைக்கு அளித்தார்.**

தமிழ் மொழிக்கு பாவேந்தர்; திராவிட இயக்கத்தின் புரட்சிக்கவிஞர்; தமிழினத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் போற்றும் வகையிலான அறிவிப்பு ஒன்றை தங்களுடைய அனுமதியோடு இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் தமிழ்நாடு முதலமைச்சர் என்கிற வகையில் மிகுந்த பெருமையடைகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன்.

'தமிழுக்கும் அமுதென்று பேர்;
அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!'
என்ற அழகுத் தமிழின் பெருமையைப் பேசும் வரிகளையும்,
"புதியதோர் உலகம் செய்வோம்
கெட்டப் போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"
என்ற எழுச்சி மிகுந்த வரிகளையும்,
'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!'
என்னும் போர்ப்பாடலையும்,
"பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு"
என்ற வெற்றிப் பாடலையும்,
"தூங்கும் புலியை பறை கொண்டெழுப்பினோம்;
தூய தமிழரை தமிழ் கொண்டெழுப்பினோம்"
என்று எழுச்சி முரசு கொட்டியும்
வாழ்க வாழ்கவே – வாழ்க வாழ்கவே,
வளமார் எமது திராவிட நாடு

என்று திராவிடப் பண் பாடியும், காலத்தினை வென்ற பாடல்களை நமக்குத் தந்தவர் பாவேந்தர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

தமிழை வளர்த்தல் ஒன்று; சாதியை ஒழித்தல் மற்றொன்று என்று கொள்கைப் பாதை வகுத்துத் தந்தவர் புரட்சிக்கவிஞர் அவர்கள். மொழி உணர்ச்சி, மொழி மானம், மொழி குறித்த பெருமிதம் ஆகியவற்றின் மொத்த வடிவம் தான் புரட்சிக்கவிஞர். 1929 ஆம் ஆண்டே பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் எழுச்சிக்கு அடித்தளம் அமைத்தவை பாவேந்தரின் பாடல்கள் தான். அத்தகைய பாவேந்தரை தமிழ்நாட்டின் வால்ட் விட்மன் என்று புகழ்ந்து பேசினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எங்கே, எப்பொழுது பேசினாலும் அதிலே புரட்சிக்கவிஞரின் பொன்வரிகள் ஒலித்துக் கொண்டேயிருக்கும். 1990 ஆம் ஆண்டு பாவேந்தரின் படைப்புக்களை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நாட்டுடைமையாக்கினார்கள். இன விடுதலை, மொழி விடுதலை, சமூக விடுதலை, பெண் விடுதலை, பழமைவாதம் ஒழிப்பு என்று பாவேந்தர் தன் எழுத்துகளை திராவிட இனத்திற்கு கொள்கைப் பட்டயமாக உருவாக்கித் தந்தவராவார். இன்றும் தனது எழுத்து வரிகளால் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது வரிகளை மேற்கோள் காட்டிப் பேசாத பேச்சாளர்களே இல்லை. அவரது வரிகளை எடுத்தாளாத எழுத்தாளர்களே இல்லை. அவரால் உணர்ச்சி பெறாத தமிழர்களே இல்லை என்று சொல்லத்தக்க வகையில் தமிழர் தம் உணர்விலும், குருதியிலும் கலந்தவர் புரட்சிக்கவிஞர் அவர்கள். அவரை எந்நாளும் தமிழினம் வணங்கிப் போற்றும்.

பாவேந்தரின் கவிதைகளில் இனிய இசை நயம் உண்டு; அவை உணர்த்தும் கருத்துகளில் உணர்ச்சிப் புயல்வீசும்; எளிமையான சொற்களின் மூலமாக வலிமையான கருத்துக்களைச் சொன்னார். எளிய சொற்கள் அவருடைய

..3

கவிதையில் அமையும்போது நிகரற்ற வேகம் கொண்டு நிற்கும் ஆற்றல் மிகுந்த கூரிய கருவிகளாகிவிடும். எனவேதான், அவரது கருத்துக்கள் கவிதைகளாக மட்டுமல்லாமல், கருத்துக் கருவிகளாக இன்றும் இருக்கின்றன. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தனது வாழ்நாளில் பல இளையவர்களை கவிஞர்களாகக் கண்டறிந்து ஊக்கப்படுத்தி தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தார். நூற்றுக்கும் மேற்பட்ட அக்கவிஞர்களை பாரதிதாசன் பரம்பரை என்று அழைத்து மகிழ்கின்றோம்.

இத்தகைய பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள், தமிழை உயர்த்திய உயரம் அதிகம். இத்தனை சிறப்பிற்குரிய தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான பாவேந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு, வரும் ஏப்ரல் 29 முதல் மே 5 வரை ஒரு வார காலத்திற்கு தமிழ் வார விழா கொண்டாடப்படும் என்பதை இந்தப் பேரவையில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஒரு வார காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தமிழ்மொழியையும், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பங்களிப்பைக் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்.

1. <u>கவியரங்கங்கள் மற்றும் இலக்கிய கருத்தரங்குகள்:</u>

"எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்" என்ற பாவேந்தரின் கவிதை வரிகளை மையப்படுத்தி அனைத்து மாவட்டங்களிலும் கவியரங்கங்கள் மற்றும் கருத்தரங்கங்கள் நடைபெறும். சிறந்த தமிழறிஞர்கள் மற்றும் இளங்கவிஞர்கள் இதில் பங்கேற்பார்கள்.

2. <u>பாரதிதாசன் இளம் படைப்பாளர் விருது:</u>

தமிழ் மொழியில் சிறந்து விளங்கும் இளம் எழுத்தாளர் / கவிஞர் ஒருவருக்கு பாரதிதாசன் இளம் படைப்பாளர் என்ற விருது வழங்கப்படும்.

3. <u>தமிழ் இலக்கியம் போற்றுவோம்:</u>

புகழ் பெற்ற தமிழிலக்கிய படைப்பாளிகளின் படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வரங்கங்கள் நடத்தப்படும்.

4. <u>பள்ளிகளில் தமிழ் நிகழ்ச்சிகள்:</u>

மாணவர்களிடையே தமிழ்மொழியின் பெருமையை எடுத்துரைக்க பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

5. <u>தமிழ் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள்:</u>

தமிழ் இசை, நடனம், மற்றும் மரபுக்கலைகளை மையப்படுத்திய கலை நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நடைபெறும். இதுபோன்ற தமிழ் நிகழ்ச்சிகள் மூலமாக பாவேந்தர் பிறந்த நாள் தமிழ் மணக்கும் வாரமாகக் கொண்டாடப்படும்.

தமிழ் வார விழா நமது மொழியின் பெருமையை உலகிற்கு எடுத்துரைப்பதற்கு ஒரு நல்வாய்ப்பாகும். பாவேந்தரின் கவிதைகளை நாளும் படிப்போம்; நானிலம் முழுவதும் அவரின் சிந்தனைகளைப் பரப்புவோம்; தமிழ்மொழியை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்வோம்.

"வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்" என்றார் பாவேந்தர். அத்தகைய எழுச்சியை இந்த விழாக்கள் மூலம் உருவாக்க வேண்டும்.

"கடல் போலச் செந்தமிழைப் பரப்ப வேண்டும்" என்றார் பாவேந்தர். செந்தமிழைப் பரப்ப இந்த விழாக்கள் பயன்படும்.

"வையம் ஆண்ட வண்டமிழ் மரபே உன் கையிருப்பைக் காட்ட எழுந்திரு" என்றார் பாவேந்தர். தமிழர் தம் அறிவுச் செல்வத்தைக் காட்ட இந்த விழாக்கள் பயன்படும்.

"தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என்றார் பாவேந்தர். அந்தத் தமிழ் உணர்ச்சியை மங்காமல், குன்றாமல் இந்த அரசு காத்திடும்.

..4

பாவேந்தரை கொண்டாடும் விழாவில் அனைவரும் திரளாகப் பங்கேற்று, தமிழின் புகழை உயர்த்துவோம்! உயர்த்துவோம்! என்று கூறி தமிழ் வாழ்க! தமிழினம் ஓங்குக! என்று முழங்கி அமர்கிறேன்.

4. <u>அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு</u>

1. "கடலூர் மாவட்டம், மேமாத்தூர் ஊராட்சியில் மணிமுத்தாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டியது குறித்து." திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்து பதிலுரை வழங்கினார்கள்.

2. "தஞ்சாவூர் முதல் சாயல்குடி வரை செல்லும் சாலையை இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக மாற்ற வேண்டியது குறித்து." திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை ஒன்றை பேரவைக்கு அளித்து பதிலுரை வழங்கினார்கள்.

5. <u>2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்</u>

2025–2026–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

<u>கோரிக்கை எண்.14 – எரிசக்தித் துறை,</u>

"எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை எண்.14–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,309,40,83,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,067,80,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.800,60,02,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

1. திரு. ரூபி ஆர். மனோகரன்
2. திரு. இராம. கருமாணிக்கம்
3. திரு. ஆ.மு. முனிரத்தினம்
4. திரு. செ. ராஜேஷ் குமார்
5. திரு. எஸ். சதாசிவம்
6. திரு. இரா. அருள்
7. திரு. ச. சிவகுமார்
8. திரு. ஜி.கே. மணி
9. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
10. திரு. ஆ. அருண்மொழிதேவன்
11. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
12. திரு. மு. ஜெகன்மூர்த்தி
13. திரு. எம்.ஆர். காந்தி
14. டாக்டர் (திருமதி) சி. சரஸ்வதி
15. திரு. ட்டி. இராமச்சந்திரன்
16. திரு. ஆர்.பி. உதயகுமார்
17. திரு. ஆ. கோவிந்தசாமி
18. திரு. அம்மன் K. அர்ச்சுணன்
19. திரு. கே.ஆர். ஜெயராம்
20. திரு. செ. சுந்தரராஜன்
21. திரு. செ. கிருஷ்ணமுரளி
22. திரு. S. பழனி நாடார்
23. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
24. திரு. அ. பண்ணாரி
25. திருமதி கு. மரகதம் குமரவேல்
26. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
27. திரு. P.R.G. அருண்குமார்
28. திரு. கே.பி. முனுசாமி
29. திரு. ஓ.எஸ். மணியன்
30. திரு. V.P. கந்தசாமி
31. திரு. K.N. விஜயகுமார்
32. திரு. S. ஜெயக்குமார்
33. திரு. A.K. செல்வராஜ்
34. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
35. திரு. வி.பி. நாகைமாலி
36. திரு. வே. சம்பத்குமார்
37. திரு. பி. அய்யப்பன்
38. முனைவர் இசக்கி சுப்பையா
39. திரு. மு. சக்ரபாணி
40. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம்

..5

| | |
|---|---|
| 41. திரு. பொ. அர்ஜூனன் | 47. திரு. பெரி. செந்தில்நாதன் |
| 42. திரு. சு. ரவி | 48. திரு. துரை. சந்திரசேகர் |
| 43. திரு. சா. மாங்குடி | 49. திரு. S.S. பாலாஜி |
| 44. திரு. ஜே.ஜி. பிரின்ஸ் | 50. திரு. K.A. பாண்டியன் |
| 45. திரு. K. மாரிமுத்து | 51. திரு. எஸ்.பி. வேலுமணி |
| 46. திரு. கே.பி. அன்பழகன் | 52. திரு. மா. சின்னதுரை |

**<u>கோரிக்கை எண்.37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)</u>**

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மானியக் கோரிக்கை எண்.37–ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.226,67,68,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்கள்.

கீழ்க்காணும் உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்:–

| | |
|---|---|
| 1. திரு. R. ராதாகிருஷ்ணன் | 28. திரு. செ. கிருஷ்ணமுரளி |
| 2. திரு. ரூபி ஆர். மனோகரன் | 29. திரு. S. பழனி நாடார் |
| 3. திரு. இராம. கருமாணிக்கம் | 30. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் |
| 4. திரு. செ. ராஜேஷ் குமார் | 31. திரு. அ. பண்ணாரி |
| 5. முனைவர் (திருமதி) தாரகை கத்பட் | 32. திருமதி கு. மரகதம் குமரவேல் |
| 6. திரு. எஸ். சதாசிவம் | 33. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் |
| 7. திரு. இரா. அருள் | 34. திரு. P.R.G. அருண்குமார் |
| 8. திரு. ச. சிவகுமார் | 35. திரு. கே.பி. முனுசாமி |
| 9. திரு. ஜி.கே. மணி | 36. திரு. V.P. கந்தசாமி |
| 10. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் | 37 திரு. A.K. செல்வராஜ் |
| 11. திரு. எம்.ஆர். காந்தி | 38. திரு. சேவூர் S. இராமச்சந்திரன் |
| 12. டாக்டர் (திருமதி) சி. சரஸ்வதி | 39. திரு. வி.பி. நாகைமாலி |
| 13. திரு. ஓ.எஸ். மணியன் | 40. முனைவர் இசக்கி சுப்பையா |
| 14. திரு. பெ. பெரியபுள்ளான் (எ) செல்வம் | 41. திரு. மு. சக்ரபாணி |
| 15. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி | 42. திரு. கி. அசோக்குமார் |
| 16. டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 43. திரு. ஜே.ஜி. பிரின்ஸ் |
| 17. திரு. மு. ஜெகன்மூர்த்தி | 44. திரு. K. மாரிமுத்து |
| 18. திரு. S.S. பாலாஜி | 45. திரு. கே.பி. அன்பழகன் |
| 19. திரு. ட்டி. இராமச்சந்திரன் | 46. திரு. பெரி. செந்தில்நாதன் |
| 20. திரு. ஆர்.பி. உதயகுமார் | 47. திரு. பி. அய்யப்பன் |
| 21. திரு. இ.மா. மான்ராஜ் | 48. திரு. வே. சம்பத்குமார் |
| 22 திரு. ஆ. அருண்மொழிதேவன் | 49. திரு. பொன். ஜெயசீலன் |
| 23. திரு. ஆ. கோவிந்தசாமி | 50. திரு. மா. செந்தில்குமார் |
| 24. திரு. அம்மன் K. அர்ச்சுணன் | 51. திரு. K.A. பாண்டியன் |
| 25. திரு. கே.ஆர். ஜெயராம் | 52. திரு. மா. சின்னதுரை |
| 26. திரு. செ. சுந்தரராஜன் | 53. திரு. S. ஜெயக்குமார் |
| 27. திரு. ஆ.மு. முனிரத்தினம் | |

..6

மேற்காணும் மானியக் கோரிக்கைகள் மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதத்தில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்:–

1. **திரு. நத்தம் இரா. விசுவநாதன்**
2. **திரு. A.J. மணிக்கண்ணன்**
3. **திருமதி V. அமலு**
4. **திரு. JMH. அசன் மௌலானா**
5. **டாக்டர் A.R.R. ரகுராமன்**
6. **திரு. மா. செந்தில்குமார்**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

மானியக் கோரிக்கை எண்.14 – எரிசக்தித் துறை மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.14 – எரிசக்தித் துறை கீழ் கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மானியக் கோரிக்கை எண்.37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) கீழ் கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகை முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டது.

பேரவை பிற்பகல் 2.13 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2025–ஆம் ஆண்டு, **ஏப்ரல் திங்கள் 23–ஆம் நாள் புதன்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**